## சுருக்கம்

முதலமைச்சர் பொது நிவாரண நிதி – பேரிடர் மேலாண்மை – மிக்ஜாம் புயல் வெள்ளத்தால் உயரிழந்த 17 நபர்களின் குடும்பத்தினருக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா ரூ.1,00,000/– வீதம் மொத்தம் ரூ.17,00,000/– நிவாரணத்தொகை வழங்க நிதி ஒப்பளிப்பு செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, பேரிடர் மேலாண்மை அலகு, (பே.மே.1(1)) பிரிவு

அரசாணை (1டி) எண்.921

நாள் 29.12.2023
சோபகிருது வருடம், மார்கழி –13,
திருவள்ளுவர் ஆண்டு 2054,
படிக்கவும்:

1. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் செய்தி வெளியீடு எண்.2470, நாள் 09.12.2023.
2. அரசாணை (நிலை) எண். 579, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை (பே.மே 3(2)), துறை, நாள் 09.12.2023.
3. கூடுதல் தலைமைச் செயலர் / வருவாய் நிருவாக ஆணையர், கடித எண்.இ.இ. 1(2).1553/2023, நாள் 13.12.2023.

.......

**ஆணை:–**

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் 09.12.2023 நாளிட்ட அறிக்கையில் இதர அறிவிப்புகளுடன் கீழ்காணும் அறிவிப்பு வெளியிடப்பட்டது.

வங்கக்கடலில் உருவான மிக்ஜாம் புயல் காரணமாக தமிழ்நாட்டில் சென்னை, திருவள்ளூர், செங்கல்பட்டு மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்களில் பல்வேறு பகுதிகளில் முன் எப்போதும் இல்லாத வகையில் 03.12.2023 மற்றும் 04.12.2023 ஆகிய இரண்டு நாட்களில் கனமழை முதல் அதிகனமழைப்பொழிவு ஏற்பட்டு பல்வேறு பகுதிகளை வெள்ள நீர் சூழ்ந்து வீடுகளுக்குள் வெள்ளம் புகுந்ததால் பொதுமக்கள் பாதிப்புற்குள்ளாகினர். மேலும் புயலின் காரணமாக மனித உயிரிழப்புகளும் மற்றும் பிற சேதங்களும் நேர்ந்தன.

"புயல் வெள்ளத்தினால் உயிரிழந்தவர்களின் குடும்பத்திற்கு, இழப்பிட்டுத் தொகையை ரூபாய் 4 இலட்சத்திலிருந்து 5 இலட்சமாக உயர்த்தி வழங்கிட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்."

2. மேலே மூன்றில் படிக்கப்பட்ட கடிதத்தில் கூடுதல் தலைமைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையர் தனது அறிக்கையில் கீழ்கண்டவாறு தெரிவித்துள்ளார்–

I. வங்கக்கடலில் உருவான மிக்ஜாம் புயல் காரணமாக தமிழ்நாட்டில் பெருநகர சென்னை மாநகராட்சி, திருவள்ளூர், செங்கல்பட்டு மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்களில் பல்வேறு பகுதிகளில் முன் எப்போதும் இல்லாத வகையில் 03.12.2023 மற்றும் 04.12.2023 ஆகிய இரண்டு நாட்களில் கனமழை முதல் அதிகனமழைப்பொழிவு ஏற்பட்டு பல்வேறு பகுதிகளை வெள்ள நீர் சூழ்ந்து வீடுகளுக்குள் வெள்ளம் புகுந்ததால் பொதுமக்கள் பாதிப்பிற்குள்ளாகினர். மேலும் புயலின் காரணமாக மனித உயிரிழப்புகளும் மற்றும் பிற சேதங்களும் நேர்ந்தன.

II. மிக்ஜாம் புயல் காரணமாக சென்னை, திருவள்ளூர், செங்கல்பட்டு மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்களில் பல்வேறு பகுதிகளில் முன் எப்போதும் இல்லாத வகையில் 03.12.2023 மற்றும் 04.12.2023 ஆகிய இரண்டு நாட்களில் கனமழை முதல் அதிகனமழைப்பொழிவு ஏற்பட்டதில் நாளது வரை 17 நபர்கள் உயிரிழந்துள்ளனர்.

III. மேற்படி சென்னை, திருவள்ளூர், செங்கல்பட்டு மற்றும் காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர்களிடமிருந்து பெறப்பட்ட அறிக்கையில் உயிரிழந்த கீழ்காணும் 17 நபர்களின் விவரம் பெறப்பட்டுள்ளது

| வ. எண் | நாள் | இறந்தவரின் பெயர் மற்றும் முகவரி திரு/ திருமதி | மாவட்டம் | இறப்பின் தன்மை | நிவாரணத் தொகை |
|---|---|---|---|---|---|
| 1 | 05.12.2023 | திரு.ஆனந்த்<br>த/பெ.ரத்தினம்,<br>சென்னை மாவட்டம்,<br>புரசைவாக்கம் வட்டம்,<br>பிராட்வே,<br>சென்னை –1 | சென்னை | மரம் விழுந்து சிகிச்சை பலனின்றி உயிரிழந்தமை | ரூ.1,00,000 |
| 2 | 04.12.2023 | திரு.பத்மநாபன்<br>த/பெ.பேரமுத்து,<br>சென்னை மாவட்டம்,<br>புரசைவாக்கம் வட்டம்,<br>ஜோன்ஸ் சாலை,<br>பிராட்வே,<br>சென்னை –1 | சென்னை | நீரில் நடந்து செல்லும் போது மின்சாரம் தாக்கி உயிரிழந்தமை | ரூ.1,00,000 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 3 | 04.12.2023 | திரு.கணேஷ் த/பெ. மன்னார், சென்னை மாவட்டம், சோழிங்கநல்லூர் வட்டம், ஒக்கியம் துரைப்பாக்கம் கிராமம். | சென்னை மாவட்டம் | நீரில் நடந்து சென்றபோது மின்கம்பி மிதித்ததில் மின்சாரம் பாய்ந்து உயிரிழந்தமை | ரூ.1,00,000 |
| 4 | 05.12.2023 | திரு.மதன்சிங் த/பெ.லால்சிங், சென்னை மாவட்டம், சோழிங்கநல்லூர் வட்டம், பள்ளிக்கரனை குறுவட்டம், ஒக்கியம் துரைப்பாக்கம் கிராமம் | சென்னை மாவட்டம், | நீரில் மூழ்கி உயிரிழந்தமை | ரூ.1,00,000 |
| 5 | 04.12.2023 | திரு.முருகன், த/பெ. ராதாகிருஷ்ணன், சென்னை மாவட்டம், வேளச்சேரி வட்டம், திருவான்மியூர் குறுவட்டம். சென்னை-90. | சென்னை மாவட்டம், | சாலையில் நின்றிருந்த மரம் சாய்ந்து விழுந்து உயிரிழந்தமை | ரூ.1,00,000 |
| 6 | 05.12.2023 | அடையாளம் தெரியாத ஆண் நபர் (வயது 25-30) ஆவடி வட்டம், பாண்டேஸ்வரம் கிராமம். (வடஇந்தியர்) | திருவள்ளூர் மாவட்டம் | வெள்ளநீரில் மூழ்கி உயிரிழந்தமை | ரூ.1,00,000 |
| 7 | 04.12.2023 | ரூபேஷ் த/பெ. சோகன்லால் திருவள்ளூர் மாவட்டம், விளாங்காடு பாக்கம், பொன்னேரி வட்டம். (வடஇந்தியர் ராஜஸ்தான் மாநிலம், பாலி மாவட்டம்,) | திருவள்ளூர் மாவட்டம் | பள்ளத்தில் உள்ள நீரில் மூழ்கி உயிரிழந்தமை. | ரூ.1,00,000 |
| 8 | 04.12.2023 | திரு.சாம்ராஜ் த/பெ.கௌதம் திருவள்ளூர் மாவட்டம், விளாங்காடு பாக்கம், பொன்னேரி வட்டம். (வடஇந்தியர் ராஜஸ்தான் மாநிலம், பாலி மாவட்டம்,) | திருவள்ளூர் மாவட்டம் | பள்ளத்தில் உள்ள நீரில் மூழ்கி உயிரிழந்தமை | ரூ.1,00,000 |

த.பி.பா....

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 9 | 04.12.2023 | திருமதி.பரிபூரணம் க/பெ.எழுமலை செங்கல்பட்டு மாவட்டம், திருக்கழுக்குன்றம் வட்டம், நரப்பாக்கம் மதுரா அகதீஸ்வர மங்கலம் கிராமம். | செங்கல்பட்டு | அரிசி ஆலையின் ஒரு பக்க சுவர் இடிந்து விழுந்ததில் உயிரிழந்தமை | ரூ.1,00,000 |
| 10 | 04.12.2023 | திரு. ஜாகிர் செங்கல்பட்டு மாவட்டம், திருப்போரூர் வட்டம், கானாத்தூர் ரெட்டிக்குப்பம் கிராமம் (ஜார்கண்ட் வடமாநிலத்தைச் சேர்ந்தவர்) | செங்கல்பட்டு மாவட்டம் | வீட்டின் மேல்தளத்தில் உள்ள சிமெண்ட் ஷீட் மற்றும் கைப்பிடி சுவர் இடிந்து விழுந்து உயிரிழந்தமை. | ரூ.1,00,000 |
| 11 | 04.12.2023 | திரு.அப்ரோச் செங்கல்பட்டு மாவட்டம், திருப்போரூர் வட்டம் கானாத்தூர் ரெட்டிக்குப்பம் கிராமம். (ஜார்கண்ட் வடமாநிலத்தைச் சேர்ந்தவர்) | செங்கல்பட்டு மாவட்டம் | வீட்டின் மேல்தளத்தில் உள்ள சிமெண்ட் ஷீட் மற்றும் கைப்பிடி சுவர் இடிந்து விழுந்து உயிரிழந்தமை. | ரூ.1,00,000 |
| 12 | 05.12.2023 | செல்வி.சகாயமேரி த/பெ. கொண்டையா செங்கல்பட்டு மாவட்டம், தாம்பரம் வட்டம், பீர்க்கன்கரணை கிராமம். | செங்கல்பட்டு மாவட்டம் | வெள்ள நீரில் மூழ்கி உயிரிழந்தமை | ரூ.1,00,000 |
| 13 | 04.12.2023 | அன்பு (எ) அன்பழகன் த/பெ. வேதாசம் செங்கல்பட்டு மாவட்டம், திருப்போரூர் வட்டம், தண்டலம் கிராமம். | செங்கல்பட்டு மாவட்டம் | வெள்ளநீரில் மூழ்கி உயிரிழந்தமை | ரூ.1,00,000 |
| 14 | 05.12.2023 | திரு.சகாயராஜ் த/பெ.கெங்காதரன் செங்கல்பட்டு மாவட்டம், திருப்போரூர் வட்டம், வளவந்தாங்கல் கிராமம். | செங்கல்பட்டு மாவட்டம் | மழையில் சூழ்ந்த ஈரத்தில் உள்ள தனது வீட்டினை திறக்கும் போது மின்சாரம் தாக்கி உயிரிழந்தமை. | ரூ.1,00,000 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 15 | 04.12.2023 | அஜய் கண்ணன் த/பெ.வீரன் செங்கல்பட்டு மாவட்டம், பல்லாவரம் வட்டம், அஸ்தினாபுரம் கிராமம் | செங்கல்பட்டு மாவட்டம் | வெள்ளநீரில் மூழ்கி உயிரிழந்தமை | ரூ.1,00,000 |
| 16 | 05.12.2023 | அடையாளம் தெரியாத நபர் செங்கல்பட்டு மாவட்டம், திருப்போரூர் வட்டம் | செங்கல்பட்டு மாவட்டம் | வெள்ளநீரில் மூழ்கி உயிரிழந்தமை | ரூ.1,00,000 |
| 17 | 06.12.2023 | திரு.பிரசாத் த/பெ.சம்பத் காஞ்சிபுரம் மாவட்டம், குன்றத்தூர் வட்டம், குன்றத்தூர் ஆ கிராமம், | காஞ்சிபுரம் | இருசக்கர வாகனத்தில் பயணம் செய்த போது நீரில் அடித்துச் செல்லப்பட்டு உயிரிழந்தமை | ரூ.1,00,000/ |
| மொத்தம் | | | | | ரூ.17,00,000 |

IV. மேலும், இயற்கை பேரிடர்களால் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு மாநில நிவாரண நிதியில் இருந்து வழங்குவது தொடர்பாக, அரசாணை (நிலை) எண். 579, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை (பே.மே 3(2)), துறை, நாள் 09.12.2023–இல் உடன் படிக்கப்பட்ட பின்னிணைப்பு–I வரிசை எண்.1–இல் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

| Sl.No. | Items | Norms of Assistance |
|---|---|---|
| 1 | GRATUITIOUS RELIEF<br>(a) Ex–gratia payment to families of deceased persons | Rs.4.00 lakhs per deceased person including those involved in relief operation or associated in preparedness activities, subject to certification regarding cause of death from appropriate authority. |

V. எனவே, மிக்ஜாம் புயலின் காரணமாக உயிரிழந்தவர்களின் குடும்பத்திற்கு, மாநில பேரிடர் நிவாரண நிதியிலிருந்து ரூ.4.00 இலட்சமும், முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து ரூ.1.00 இலட்சமும் ஆக மொத்தம் ரூ.5.00 இலட்சம் ரூபாயும் வழங்க வழிவகை உள்ளது என்றும், மேற்படி உயிரிழந்த 17 நபர்களின் குடும்பத்தினருக்கு ரூ.5.00 இலட்சம் வீதம் மொத்தம் ரூ.85.00 இலட்சம் நிவாரணம் வழங்கப்பட வேண்டும். இந்நிவாரணம் வழங்குவதற்கு அரசாணை (நிலை) எண். 579, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை (பே.மே 3(2)), துறை, நாள் 09.12.2023–இன்படி மாநில பேரிடர் நிவாரண நிதியிலிருந்து நபர் ஒருவருக்கு ரூ.4.00 இலட்சம் வீதம் மொத்தம் ரூ.68,00,000/–

த.பி.பா....

(ரூபாய் ஆறுபத்தி எட்டு இலட்சம் மட்டும்) மட்டுமே நிவாரணம் வழங்க வழிவகைகள் உள்ளது. மீதமுள்ள ரூ.17,00,000/- (ரூபாய் பதினேழு இலட்சம் மட்டும்) (17 நபர்களுக்கு தலா ரூ.1,00,000 இலட்சம்) முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து (CMPRF) நிவாரணத் தொகையாக வழங்க வழிவகை உள்ளது.

VI. மிக்ஜாம் புயலின் காரணமாக ஏற்பட்ட கனமழை முதல் அதிகன மழையால் உயிரிழந்த மேற்படி 17 நபர்களின் குடும்பத்தினருக்கு அரசு அறிவித்துள்ள முழுமையான இழப்பீட்டுத் தொகையினை (தலா ரூ.5,00,000/- வீதம்) வழங்குவதற்கு ஏதுவாக, முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து (CMPRF) ரூ.17,00,000/- இலட்சம் நிதி ஒப்பளிப்பு பெற்றுத் தருமாறு அரசைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

3. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் 09.12.2023 நாளிட்ட அறிவிப்பிற்கிணங்க, கூடுதல் தலைமைச் செயலர் / வருவாய் நிருவாக ஆணையரின் செயற்குறிப்பினை ஏற்று, மிக்ஜாம் புயல் வெள்ளத்தின் காரணமாக ஏற்பட்ட கனமழை முதல் அதிகனமழையால் பாதிக்கப்பட்டு உயிரிழந்த மேலே பத்தி 2-இல் உள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள 17 நபர்களின் குடும்பங்களுக்கு அரசு அறிவித்துள்ள முழுமையான இழப்பீட்டுத் தொகையினை (தலா ரூ.5,00,000/- வீதம்) வழங்குவதற்கு ஏதுவாக, முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா ரூ.1,00,000 இலட்சம் வீதம் மொத்தம் ரூ.17,00,000/- (ரூபாய் பதினேழு இலட்சம் மட்டும்) நிதியுதவி வழங்க நிதி ஒப்பளிப்பு செய்து அரசு ஆணையிடுகிறது.

4. மேலே பத்தி 3-இல் ஒப்பளிக்கப்பட்டுள்ள மொத்த தொகையான ரூ.17,00,000/- (ரூபாய் பதினேழு இலட்சம் மட்டும்)-இல் சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர் பெயரில் ரூ.5,00,000/- (ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்), திருவள்ளூர் மாவட்ட ஆட்சித் தலைவர் பெயரில் ரூ.3,00,000/- (ரூபாய் மூன்று இலட்சம் மட்டும்), செங்கல்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் பெயரில் ரூ.8,00,000/- (ரூபாய் எட்டு இலட்சம் மட்டும்) மற்றும் காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் பெயரில் ரூ.1,00,000/-மும் காசோலைகளை முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து மேற்குறிப்பிட்ட ஆட்சியாளர்களுக்கு அனுப்பி வைக்குமாறு அரசு இணைச் செயலாளர் மற்றும் பொருளாளர், நிதி (முதலமைச்சர் பொது நிவாரண நிதி)த் துறை, சென்னை-9, அவர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

5. மேலும், இந்நேர்வில் வேறு எந்த திட்டத்தின் கீழும் நிவாரண உதவி ஏதும் வழங்கப்படவில்லை என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுமாறும், ஏற்கனவே மேற்காணும் நிகழ்வில் உயிரிழந்தவர்களின் குடும்பத்திற்கு வேறு எந்த வகையிலும் அரசின் நிதியுதவி வழங்கப்பட்டிருப்பின் அத்தொகையை இந்நிதியிலிருந்து பிடித்தம் செய்து முதலமைச்சர் பொது நிவாரண நிதி என்ற பெயருக்கு வழங்கத் தக்க வகையில் காசோலை/வரைவோலையாக அனுப்பும்படியும் மீதமுள்ள தொகையை உயிரிழந்தவர்களின்

குடும்பத்தினருக்கு காசோலை மூலமாகவோ அல்லது அஞ்சலக சேமிப்பு வங்கிக்கணக்கு மூலமாகவோ உரிய நடைமுறை விதிகளின்படி வழங்கி, நிவாரணத்தொகை பயனாளிகளுக்கு முழுமையாகப் போய்ச் சேரும் வகையில் செயல்பட்டு, அவர்களிடமிருந்து வரிவில்லையிட்ட அசல் பற்றுச் சீட்டினைப் பெற்று அதில் வட்டாட்சியர் பதவிக்கு குறையாத அலுவலரின் சான்றொப்பத்துடனும் உரிய அலுவலக முத்திரையுடனும் அரசு இணைச் செயலாளர் மற்றும் பொருளாளர், நிதி (முதலமைச்சர் பொது நிவாரண நிதி)த்துறை, சென்னை-9, அவர்களுக்கும், அதன் நகலினை வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறைக்கும் அனுப்பி வைக்குமாறு சென்னை, திருவள்ளூர், செங்கல்பட்டு மற்றும் காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர்கள் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

6. இவ்வாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற எண்.(இ.கோ.எண்.18697)/முபொநிநி /குறிப்பு #9-17/2023, நாள் 27.12.2023-இல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

வே. ராஜாராமன்
அரசு செயலாளர்

**பெறுநர்**

அரசு இணைச் செயலாளர் மற்றும் பொருளாளர்,
நிதி (முபொநிநி)த் துறை, சென்னை – 9 (3 படிகள்).
கூடுதல் தலைமைச் செயலாளர் /
வருவாய் நிருவாக ஆணையர், சென்னை – 5.
ஆணையர் (ச.பா.தி.), சேப்பாக்கம், சென்னை-5.
மாவட்ட ஆட்சியர், சென்னை, திருவள்ளூர்,
செங்கல்பட்டு மற்றும் காஞ்சிபுரம் மாவட்டம்.

**நகல்**

முதலமைச்சர் அலுவலகம், சென்னை – 9.
வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை
அமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை-9.
வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை (அநமு-2) துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9.
இ.கோ/உதிரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

29/12/2023

பிரிவு அலுவலர்

29.12.23